# தமிழ் மரபில் செப்பேடுகள் உணர்த்தும் நாயக்கர் காலம்

# Tamil Tradition of Nayak evidenced by Copper Plates

***பேரா. முனைவர். இரா. மீனாட்சி***
மேனாள் துணை முதல்வர்
செவாலியர் டி. தாமஸ் எலிசபெத் மகளிர் கல்லூரி
சென்னை, இந்தியா

**Prof. Dr. R. Meenakshi**
*Former Deputy Principal*
*Chevalier T. Thomas Elizabeth Women's College*
*Chennai, India*

## ஆய்வுச் சுருக்கம்

*தமிழகத்தின் வரலாறு என்பது நீண்ட நெடிய பயணத்தைக் கொண்டது. தமிழ் நிலம் சார்ந்த பண்பாட்டு அடையாளங்கள் தனித்துவமான தன்மை கொண்டவை. இத்தகைய வரலாற்று மதிப்புகள் காலந்தோறும் பல்வேறு தளங்களில் பதிவு செய்யப்பட்டு வந்துள்ளன. இலக்கியங்கள் கல்வெட்டுக்கள், செப்பேடுகள், ஓலைச் சுவடிகள், ஓவியங்கள், படமங்கள் எனத் தமிழ் குறித்த பண்பாட்டு விழுமியங்களை நாம் எங்கும் பரக்கக் காணலம். அதிலும் குறிப்பாக இலக்கியங்களுக்கு இணையாக பல வரலாற்று உண்மைகள் கல்வெட்டு மற்றும் செப்பேடுகளில் காணக் கிடைக்கின்றன என்பதே மறுக்க இயலாத செய்தி நமது தமிழகத்தை ஆண்ட பெருமை மிக்க மன்னர்களின் கலை இலக்கியப் பண்பாட்டுப் புலம் என்பது சிறப்புக்குரியது. அவற்றையெல்லாம் என்றைக்கும் எடுத்தியம்பக் கூடிய ஆகச் சிறந்த வரலாற்று ஆவணங்களாகச் செப்பேடுகள் மற்றும் கல்வெட்டுகள் திகழ்கின்றன. இப்படியான பின்புலத்தில் தமிழ் மரபில் காணலாகும் நாயக்கர் கால வாழ்வியல் முறைகளை செப்பேடுகள் வழி அறிவதே இக்கட்டுரையின் நோக்கமாகின்றது.*

***ஆய்வு நோக்கம்:***

*செப்பேடுகள், ஓலைச் சுவடிகள், வரலாற்று ஆவணங்கள், கல்வெட்டுக்கள், நாயக்கர் காலம்*

## Abstract

*The history of Tamil Nadu has come a long way. The cultural identities of the Tamil land are unique. Such historical values have been recorded in various spheres from time to time. Literature Inscriptions, copper plates, palm leaf manuscripts, paintings and pictures are the cultural values of Tamil everywhere. Especially, it is an undeniable fact that many historical facts are found in inscriptions and copper plates parallel to literature. Copper plates and inscriptions are the finest historical documents that can forever be recorded. The purpose of this article is to know about the life style of the Nayak period found in the Tamil tradition through copper plates.*

***Keywords:***

*Copper Plates, Palm Leaf Manuscripts, Historical Documents, Inscriptions, Nayak Period.*

**Citation**

Meenakshi, R. "Tamil Tradition of Nayak evidenced by Copper Plates." *Journal of Tamil Culture and Literature*, vol. 3, no. 4, 2024, pp. 77–81.

**செப்பேடுகள் வரையறை**

*செப்பேடுகளின் முக்கியத்துவம் என்பது நமது தமிழகத்தில் தொன்று தொட்டே இருந்து வந்துள்ளது. இன்றைய நிலையில் பழங்காலத்தைப் பற்றி அறிய உதவும் சிறந்த தொல்லியல் சான்றுகளாகச் செப்பேடுகள் திகழ்கின்றன எனில் அது மிகையாகா. இதற்கு முன்பாக நாம் "செப்பேடு" என்பதன் வரையறை குறித்து தெரிந்து கொள்வது அவசியமாகிறது. தமிழகத்தை ஆட்சி செய்த மன்னர்களின் கொடைச் சிறப்புக்கள், குடும்பச் சூழல், போர் பற்றிய பண்பாட்டுக் குறிப்புகள் ஆகியவற்றை "செம்பு" எனப்படும் உலோகத் தகட்டில் பதிந்து வைத்தனர். இதுவே 'செப்பேடுகள்' என வழங்கலாயிற்று.*

*செப்பேடுகள், ஓலைச்சுவடிகள் மட்கிப் போவது போல அழிவது இல்லை. எனவே பண்டைய மக்கள் இவற்றைப் பூமியில் புதைத்து வைத்துப் பாதுகாத்தனர். மேலும் செப்பேடுகள் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குக் கொண்டு செல்வது என்பது காணப்படும் செப்பேடகளின் வழி அரிய வரலாற்றைத் தரவுகள் நம் இனத்தின் பெருமைகளை பறைசாற்றிக் கொண்டே இருக்கின்றன. அதிலும் குறிப்பாக இந்தியாவிலேயே தமிழகத்தில் அதிகப்படியான செப்பேடுகள் கிடைத்துள்ளன என்பது நமது பாரம்பரியத்தை மீட்டெடுப்பதற்கான முயற்சியாகவே வரதலாற்று ஆய்வாளர்களால் கருதப்படுகின்றது. அக்காலத் தமிழ் மக்களின் அரசியல், பொருளாதார, கலை, இலக்கியம், சமயம், நாகரிகம் முதலானவற்றை எல்லை மீறிய கற்பனைகள் இன்றி உள்ளது உள்ளபடி அறிய உதவும் வரலாற்று மூலங்களே செப்பேடுகள் எனில் அது மிகையாகாது.*

**தமிழிலக்கிய வரலாற்றில் நாயக்கர் காலம்**

*தமிழகத்தின் பிற்கால வரலாற்றை அறிய ஏராளமான சான்றுகள் உள்ளன. அவை கல்வெட்டுக்கள், இலக்கியங்கள், செப்புப் பட்டயங்கள், அரசவைப் புலவர்களால் எழுதப்பட்ட குறிப்பேடுகள், ஐரோப்பிய வணிகர்களின் குறிப்பேடுகள் ஆகியவை அடங்கும். இதன் மூலம் வரிவிதிப்பு, சமய நிறுவனங்கள், பொதுப்பணி, கொடைகள் போன்றவை பற்றிய விவரங்களையும் அறியலாம். தமிழக நாயக்கர் வரலாற்றின் தோற்றம் என்பது விசயநகரப் பேரரசின் தொடக்கமாக அமைகின்றது. நரச நாயக்கரின் மகனாக கி.பி. 1509இல் இளம் வயதிலேயே பட்டத்திற்கு வந்தார் கிருஷ்ண தேவராயர். இவரைத் தொடர்ந்து விசுவநாத நாயக்கர், முதலாம் கிருஷ்ணப்ப நாயக்கர், தளவாய் அரியநாதர், முத்துக் கிருஷ்ணப்ப நாயக்கர், முதலாம் முத்து வீரப்ப நாயக்கர், திருமலை நாயக்கர், சொக்கநாத நாயக்கர், மூன்றாம் முத்து வீரப்ப நாயக்கர், இராணி மங்கம்மாள், விஜயரங்க சொக்கநாத நாயக்கர் மற்றும் விஜயரங்க சொக்கநாதரின் மனைவி மீனாட்சியோடு நாயக்கர் பரம்பரை 1736 ஆம் ஆண்டோடு முழுவதும் மறைந்தது. விஜய நகரத்தின் சின்னமாக இருந்து 207 ஆண்டுகள் மதுரை நாட்டை மாண்புற ஆட்சி செய்த நாயக்க மன்னர்கள் ஆட்சியில் ஏற்பட்ட நன்மைகள் ஏராளம் என்பதே உண்மை.*

**நாயக்கர் கால சமயம்**

*நாயக்கர் காலத் தமிழகத்தில் ஆட்சியாளர்களிடம் சமரச நோக்கு இருந்தது. இதனால் மக்களிடம் அமைதி நிலவியது. நாயக்க மன்னர்களுள் திருமலை நாயக்கரே முழு உரிமை பெற்ற மன்னராக முப்பத ஆண்டுகளுக்கும் மேலாக ஆட்சி நடத்தியவர் ஆவார். மதுரை, தஞ்சை, செஞ்சி என நாயக்கர்கள் தங்களின் செங்கோலாட்சியைத் திறம்பட நடத்தி மக்களின் மகிழ்ச்சியான வாழ்விற்கு அடித்தளமிட்டனர். நாயக்கர் கால செப்புப் படிமங்கள்*

*வழி சமயச் சச்சரவுகள் இல்லாத சமூகம் நிலவியதை அறிய முடிகிறது. திருவரங்கத்தில் உள்ள சிங்கப் பெருமாள் இரணியனை மார்பு பிளந்து நிற்கும் காட்சி, சேரன் மாதேவி இராமசாமி காயிலிலிருந்து கிடைத்த கண்ணன், உருக்கு, மணி, சத்தியபாமை வடிவங்கள், மதுரை ஆலயத்துப் பிச்சையேந்தும் பெருமாள், கால் மாறி ஆடிய பிரான் ஆகியன குறிப்பிடத்தக்க படிமங்களாக விளங்குகின்றன. திருவைக் குண்டத்துக் கண்ணபிரான் கோயிலிலுள்ள லட்சுமி நரசிம்மர், நெல்லையப்பர் கோவிலுள்ள காந்திமதி, பாபநாசம் கோயிலிலுள்ள அகத்திய முனி, குற்றலாத்து அமர்ந்துறையும் கூத்தன் திருமேனி ஆகியவற்றைப் பற்றிய செப்புப் படிமங்கள் குறிப்பிடத்தக்கவையாக விளங்குகின்றன.*

*மேலும் இக்காலச் செப்புப் பட்டயங்கள் வழி இருவேறுபட்ட தெய்வ மரபுகள் பற்றி அறிந்து கொள்ள முடிகிறது. பெருந்தெய்வம் மற்றும் சிறுதெய்வம் என இரு தெய்வ வழிபாட்டு முறைகளும் மக்களிடம் செல்வாக்குப் பெற்ற காலமாக நாயக்கர் காலம் விளங்கியது எனலாம். மதுரை மீனாட்சி அம்மன், சொக்க நாதர், சோலைமலை அழகர் ஆகியோர் பெரிதும் போற்றப்பட்டனர். இவர்களுக்கு இணையாக வைணவ சமய மரபு போற்றப்பட்டது. பழனிமலை முருகனும் இராமேசுவர சுவாமியும் செப்புப் படிமங்களில் காணப்பெறுகின்றனர். வெள்ளியங்குன்றம் செப்பேடு அஃகர் போவிலில் நடைபெறும் சித்திரை திருவிழாவைப் பற்றி எடுத்துக் கூறுகிறது. சிறுவாலைச் செப்பேடுகளில் முதன்மை மரியாதை, பட்டுப்பரிவட்டம், தீர்த்தம் ஆகியவை பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன.*

*நாட்டுப்புறங்களில் உறைந்த சிறுதெய்வங்கள் மீது மக்கள் பயமும் பக்தியும் கொண்டிருந்தனர் என்பதை பல பட்டயங்கள் உணர்த்துகின்றன. முனுசாமி, கம்பத்தடிக் கறுப்பசாமி, அய்யனார், அல்லியம்மாள், பொம்மயக்காள், நாட்டாச்சியம்மாள் ஆகியோர் மக்கள் மனதில் இடம்பெற்ற சிறுதெய்வங்கள் என செப்புப் பட்டயங்கள் நமக்கு அறிவிக்கின்றன.*

*மதுரைத் திருமலை நாயக்கர் சமயப் பொறையுணர்வு மிக்கவராகத் திகழ்ந்தார். இதனால் பல்வேறு சமயங்கள் நாயக்கர் காலத்தில் ஏற்றம் பெற்றன. அதில் முக்கியத்துவம் வாய்ந்தது இஸ்லாமும் கிறித்தவமும் ஆகும். ஆக, செப்புப் பட்டயங்கள் வழி மறுமலர்ச்சி மிக்க காலமாக நாயக்கர் கால சமய நிலை விளங்கியதை அறிய முடிகின்றது.*

**நாயக்கர் கால சமூக நிகழ்வு**

*ஒரு மன்னன் என்பவன் தனது ஆட்சிக்குட்பட்ட மக்களை சீரும் சிறப்புமாக காக்க வேண்டிய அவசியத்திற்கு உட்படுகிறான். அதிகாரம் மிக்க அசரன். வலிமையான படைகளைக் கொண்டு காப்பதோடு மட்டுமல்லாமல் குடிமக்களின் திறம் மிக்கவர்களாகக் கொண்டும் இயற்கைப் பேரழிவுகளிலிருந்து காப்பாற்றும் கடமை உண்டு. இத்தகைய பண்புகளோடு நாயக்க மன்னர்கள் விளங்கினர் என இலந்தைக்குளம் செப்பேடு கூறுகின்றது. வழியில் செ ன்று கொண்டிருந்த ஒரு பெண்ணின் கணவனை புலியானது கொன்று விட்டது. இதனையறிந்த திருமலை நாயக்கர் புலியிடமிருந்து மக்களைக் காப்பவர்களுக்கு சிறப்புப் பரிசு வழங்கப்படும் என அறிவிக்கின்றார். அதன்படி அப்புலியைக் கொன்று மக்களைக் காத்தவருக்குத் திருமலை நாயக்கர் ஒரு கிராமத்தையே பரிசாகத் தந்து ''திருமலை மூவரையத் தேவன்'' என்ற பட்டமும் வழங்குகின்றார். மேற்கண்ட செய்தியை வத்திராயிருப்பு அருகில் உள்ள இலந்தைக்குளம் என்னும் ஊரில் உள்ள செப்பேடு விளக்குகின்றது.*

*மேலும், புலியிடமிருந்து மன்னனைக் காப்பாற்றிய வீரனுக்கும் சிறப்புப் பரிசளித்து கௌரவித்தார் திருமலை நாயக்கர். இவர் வேட்டைக்குச் சென்ற போது, தாக்க வந்த புலியைக்*

*கொன்று மன்னனைக் காப்பாற்றினார். அரங்கயசாமி நாயக்கன். உடனே அவ்விடத்திலேயே நாட்டாமை பதவி கொடுத்து தங்க ஆபரணம் வழங்கிச் சிறப்பித்தார் நாயக்கர். இதனை சிந்து மேட்டுப்பட்டிச் செப்பேடு தெள்ளத் தெளிவாக விளக்குகின்றது. இதன்மூலம் மக்கள் மகிழ்ச்சியாகவும் அமைதியாகவும் வாழ்ந்த நிலையை அறிய முடிகிறது.*

**நாயக்கர் கால பழக்க வழக்கங்கள்**

*நாயக்கர் காலத்தில் சாலைகள் அமைத்தல், குடிநீர்க் கிணறுகள், குளங்கள் வெட்டுதல், பாசன வசதி செய்தல், பயணிகளுக்குப் பாதுகாப்பாக சத்திரங்கள் கட்டுதல், ஆலயங்களில் திருப்பணிகள் புரிதல் என மக்களின் வாழ்க்கைக்குத் தேவையான அடிப்படை தேவைகள் எல்லாம் நடைமுறைப்படுத்தப்பட்டன. சாதிப்பிரிவுகள் காணப்பட்டாலும் மன்னர்கள் அவற்றையெல்லாம் தீர்த்து வைத்து அமைதியை நிலை நாட்டினர். பெண்கள் இசை, நடனம் மற்றும் போர்த் தொழிலும் சிறந்து விளங்கினர். ஆண்கள் இடையில் வேட்டி அணிந்திருந்தனர். உயர்குடிப் பெண்கள் உடன்கட்டை ஏறினர். மதுரைத்தலத்து ஓதுவார் செப்பேடு, பொம்மையக்கவுண்டன் பட்டிச் செப்பேடு ஆகியவற்றின் மூலம் நாயக்கர் கால வாழ்வியல் முறைகளை நன்கு உணர முடியும்.*

*நாயக்கர் ஆட்சியில் காணப்பட்ட தமிழ்ப் படைப்பாளிகளான திருக்குருகைப் பெருமாள் கவிராயர், குமரகுருபரர், கபர தீபக் கவிராயர் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார், உமறுப்புலவர் முதலானவர்கள் பெரிதும் போற்றப்படவில்லை. எனினும் நாயக்க மன்னர்கள் தமிழகத்தோடு பின்னிப் பிணைந்த வரலாற்றைத் தன்னகத்தே மூலம் ஆட்சியைச் செம்மையாக நடத்தினர். மேலும் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு அமர்ந்திருந்தனர். அரசர்கள் சாத்திர வல்லுநர்களோடு சாட்சி, ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு வழக்கை விசாரித்துள்ளனர். கடவுள் நம்பிக்கையை நாடியும் ஒரு சில வழக்குகளுக்குத் தீர்ப்புக் கூறப்பட்டது. காய்ச்சிய நெய்யில் கையை விடுமாறு வழங்கிய தீர்ப்புக் குறித்து சாசனங்கள் தெரிவிக்கின்றன. இவற்றைத் தவிர்த்து ஒரு சில சட்டங்களும் நடைமுறையில் இருந்தன. நிலவரி, சொத்து வரி, வணிக வரி, தொழில் வரி, படைக்கொடை வரி, சமுதாய குழு வரி, பலவின வரி, கைத்தொழில் வரி என மக்கள் வரி செலுத்திய முறைகளையும் அறிய முடிகிறது.*

*ஒன்பது கம்பளத்து நாயக்கர் செப்பேடு, கூனியூர்ச் செப்பேடு, பழனிப் பட்டயம், சிறுவாலைச் செப்பேடு, அம்மைய நாயக்கனூர்ச் செப்பேடு, திருமுருகன் பூண்டிச் செப்பேடு உள்ளிட்ட செப்பேடுகள் வழி நாயக்கர் காலப் பண்பாட்டுச் சூழலைத் தெளிவாக அறிய முடிகிறது.*

**முடிவுரை**

1. *தமிழிலக்கிய மரபில் 1526 தொடங்கி 1736 வரைக்குமான காலம் நாயக்கர்களின் காலமாக அறிய்பபடுகின்றது.*
2. *நாயக்க மன்னர்கள் காலத்தில் பெரும்பாலான செய்திகள் செப்பேடுகளில் பதிவு செய்யப்பட்டுள்ளன்.*
3. *இவர்கள் காலத்தில் சமயப் பொறையுணர்வு ஏற்பட்ட அமைதி நிலவியதைச் செப்பேடுகள் சுட்டுகின்றன.*
4. *மக்களில் அறமும் மறமும் நிறைந்தோர் மன்னனால் போற்றப்பட்டனர்.*
5. *பெண்கள் சமூக மதிப்புடன் காணப்பட்டனர்.*
6. *பெரும்பான்மை தொழில் மற்றும் உற்பத்தித் துறைகளுக்கு முக்கியத்துவம் தரப்பட்டது.*

7. சாதாரண மக்களுக்கான நீதி நிலைநிறுத்தப்பட்டது.
8. வரிகள் முறையாக கையாளப்பட்டு மக்களின் குறைகள் நிவர்த்தி செய்யப்பட்டன.
9. மேற்கண்ட முடிவுகள் இவ்வாய்வுக் கட்டுரையின் வழி பெறப்பட்டன.

**துணை நூற்பட்டியல்**


1. திருமலை நாயக்கர் செப்பேடுகள், தொகுப்பாசிரியர்கள், நடன. காசிநாதன், சு. இராசகோபால், வெ.வேதாசலம், முதற் பதிப்பு, 1944, தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை வெளியீடு
2. கல்வெட்டு சிறப்பிதழ், அக்டோபர், 2008, தமிழ்நாடு தொல்லியல் துறை வெளியீடு, சென்னை.
3. மதுரை நாயக்க அரசர்கள், ஆர்.எஸ். நாராயணசாமி ஐயர், நான்காம் பதிப்பு, 1950, வி.சூ. சுவாமிநாதன் பிரசுரம், சென்னை - 5
4. தமிழக வரலாறு, பேரா. அ. கணபதி, முதல் பதிப்பு, 1980, மல்லிகை பதிப்பகம், அண்ணாநகர், மதுரை - 625 020.


## References


1. Nadana. Kasinathan, S. Rajagopal, V.Vedachalam, Thirumalai Naicker Sepedugal, First edition, Publication of Archaeological Survey of India, Government of Tamil Nadu, 1944.
2. Epigraphical Special Issue, Publication of Tamil Nadu Archaeology Department, Chennai, October, 2008.
3. R. S. Narayanaswamy Iyer, Madurai Nayaka Arasargal, Fourth Edition, V.S. Swaminathan Publication, Chennai – 5, 1950
4. Prof. A. Ganapathy, Tamilaga Varalaru, First edition, Jasmine Publishing House, Anna Nagar, Madurai - 625 020.1980.